සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# 1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service – 2017(2018)

## (22) Administration

*Three hours*

Answer **two** questions from **Part A** and **four** questions from **Part B**.

### Part A
### Office Systems and Organizational Methods

1. Name **three** work procedures in operation in government offices and explain the advantages gained by maintaining work procedures. *(20 marks)*

2. Explain the basic characteristics of a correct filing system and explain the importance of maintaining such a filing system. *(20 marks)*

3. Explain what is meant by 'forms' and explain the importance of using forms in relation to office activities. *(20 marks)*

4. Name **four** instances where office systems used in the traditional method can be operated by information technology (use of computers) and explain the manner office system becomes efficient through it. *(20 marks)*

### Part B
### Establishments Code – (Volume I & Volume II)

5. In relation to what offences can an officer's seniority be reduced? *(15 marks)*

6. Explain the instances when transfers can be made without a transfer board recommendation. *(15 marks)*

7. Explain the responsibility of the Disciplinary Authority in issuing a Disciplinary Order. *(15 marks)*

8. State the instances where an officer can be released for service outside the public service. *(15 marks)*

9. Explain in relation to the regulations in Chapter XXVIII the rules to be followed in relation to official correspondence. *(15 marks)*

10. Explain with descriptions, the main facts that should be included when preparing a scheme of recruitment to the public service. *(15 marks)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை - 2017 (2018)

1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service – 2017(2018)

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

(23) அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும்
Elementary Constitutional Law and International Law

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் மூன்று வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி I

1. "பாராளுமன்ற மேலாண்மை மற்றும் மக்கள் இறைமை என்ற கோட்பாடுகள் ஒன்றிற்கொன்று முற்றாக முரண்படுபவை அல்ல. மாறாக, காலாகாலமாக அவை ஒன்றோடொன்று தொடர்புபட்டவை; ஒன்றுக்கொன்று துணை நிற்பவை."
   1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் இந்தக் கோட்பாடுகள் எவ்வளவு தூரம் கருத்தியல் ரீதியாக உள்வாங்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்க.

2. இலங்கையின் 1972 மற்றும் 1978 அரசியல் அமைப்புச் சட்டங்களில் 'அடிப்படை உரிமைகள்' தொடர்பான ஏற்பாடுகளை ஆராய்வதோடு; நாட்டின் மீயுயர் சட்டத்தின் (Supreme Law) முதுகெலும்பாக அமைந்துள்ள அரசியலமைப்பு உரிமைகளானது நாட்டு பிரஜைகளின் உரிமைகள், சுதந்திரம் மற்றும் விடுதலை என்பவற்றைப் பாதுகாக்கின்ற முறையினை கலந்துரையாடுக.

3. 'சட்டவாட்சி' (Rule of Law) என்பதை ஆராய்க.

4. அரசியலமைப்பொன்று அரச கொள்கை வழிகாட்டி அடிப்படைகள் (Directive principles of state policy) என்ற ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவம் என்ன? 1978 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கை அரசியலமைப்பில் காணப்படும் அத்தகைய அடிப்படைகளால் அரசியலமைப்பு நோக்கங்கள் (Constitutional purpose) ஏதேனும் நிறைவேறியுள்ளனவா? ஆராய்க.

5. இலங்கையின் 1978 அரசியலமைப்பின் 19 ஆம் திருத்தம் சட்டவாட்சிக்கு வழங்கிய பங்களிப்பை ஆராய்க.

## பகுதி II

6. இன அழிப்பைத் தடுப்பது என்பது ஒரு "விட்டுக்கொடுக்கக்கூடாத விதிமுறை" (Jus Cogens norm) ஒன்றாகக் கருதப்படுகிறது. விட்டுக் கொடுக்கக்கூடாத விதிமுறை என்பதால் கருதப்படுவது யாது? இன அழிப்பைத் தடுப்பது என்ற விடயத்தின் சட்ட விளைவுகள் (Legal Effects) இரண்டை விளக்குக.

7. தமது நாடுகளின் எல்லை தொடர்பில் ***A*** மற்றும் ***B*** எனும் இருவருக்கிடையிலும் ஒரு சட்டப் பிணக்கு நிலவுகிறது. ஒரு கட்டத்தில் நிலைமை மோசமடைந்தது. ***A*** இனது பகுதிகள் மீது குண்டுத்தாக்குதல் மேற்கொண்டு தனது உரிமையை நிலைநாட்டப் போவதாக ***B*** அச்சுறுத்துகிறது. அதற்குப் பதிலடியாக, ***B*** இன் ராணுவ முக்கியத்துவமிக்க இலக்குகள் மீது குண்டுத்தாக்குதல் நடாத்த ***A*** தீர்மானிக்கிறது.
   பொது சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் ***A*** மற்றும் ***B*** இனது தாக்குதல் பற்றி ஆராய்க.

8. அண்மையில் கிரேட் பெரியர் ரீப் (The Great Barrier Reef) என அறியப்படும் பிரதேசத்தில் சீனக் கப்பலொன்றில் எண்ணை இல்லாது போயுள்ளது. கிரேப் பெரியர் ரீப் என்பது அவுஸ்திரேலியாவின் கடல் ஆள்புல பகுதியில் அமைந்துள்ள கடல் பூங்கா (Marine Park) ஆகும். எண்ணெய் போன்று எளிதில் மாசு ஏற்படுத்தும் பதார்த்தங்களை ஏற்றிக்கொண்டு தமது கடல் பூங்காவை கடந்து செல்லும் கப்பல்களைத் தடை செய்ய வேண்டிய தேவை அவுஸ்திரேலியாவிற்கு ஏற்பட்டுள்ளது. கடல் சட்டம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின்படி அவுஸ்திரேலியாவிற்கு இத்தகைய நடவடிக்கைகளை எடுக்க முடியுமா என ஆராய்க.

[பக் 2 ஐப் பார்க்க.

**9.** 1961 ராஜதந்திர தொடர்புகள் மீதான வியன்னா சமவாயத்தின் (Vienna Convention on Diplomatic Relation - 1961) சம்பந்தப்பட்ட உறுப்புரைகளின் கீழ் 'காப்புடமை' என்ற எண்ணக்கருவினை விபரிக்குக.

**10.** பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஒப்பந்தமொன்றை முடிவுறுத்தல் (Termination of a Treaty)

(ii) அரசுகளை அங்கீகரித்தல் (Recognition of States)

(iii) அரச பொறுப்பு (State Responsibility)

(iv) இராஜதந்திர விடுபாட்டு உரிமைகளும் சிறப்புரிமைகளும் (Diplomatic Immunities an Privileges)

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது/
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை - 2017 (2018)

1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service – 2017(2018)

(24) இராஜதந்திர செயன்முறை
Diplomatic Practice

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக. எல்லா வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** (i) "ஒரு நாட்டின் சர்வதேச உறவுகள் அதன் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை ஆகும்."

இலங்கையின் சர்வதேச உறவுகளை அடிப்படையாகக் கொண்டு இதனை விளக்குக.

(ii) 'நட்பு ரீதியான வெளிநாட்டுக் கொள்கையானது இலங்கை போன்ற ஒரு நாட்டுக்கு மிகவும் அனுகூலமானதாகும்." இக்கருத்துக்கு நீங்கள் உடன்படுகிறீர்களா? காரணங்களைக் குறிப்பிடுக.

**2.** (i) "தூதரக தலைவரை (Head of Diplomatic Mission), ஏற்றுக்கொள்ளும் நாட்டினுள் (Receiving state) அவரது தலைமையில் நடைபெறும் கலந்துரையாடல் /விருந்துபசாரங்களில் அந்நாட்டின் நடவடிக்கைகள், ஒழுக்கவிதிகள் பாரம்பரிய பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றி விமர்சிக்கக்கூடாது. அவரது விருந்தினர்களால் மற்றும் பங்குபற்றியவர்களால் அது பற்றி வெளியிடப்படும் கூற்றுக்கள் அத்தூதரக தலைவருக்கு எதிரானவையாகவே பதிவு செய்யப்படும்."

மேற்கூறியவை பற்றிய உங்களது கண்ணோட்டத்தை முன்வைக்குக.

(ii) இராஜ்ஜியங்களுக்கிடையே உறவுகள் சீர்கெடக்கூடிய சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டி, அவை தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும், எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளையும் ஒப்பீட்டு ரீதியாகக் கலந்துரையாடுக.

**3.** (i) தூதரக தலைவர் ஒருவரின் பொறுப்புகளிடையே, அவரது நாட்டைச் சேர்ந்த ஒருவர் ஏற்றுக்கொள்ளும் நாட்டில் வசிக்கும் போது, அல்லது ஏதேனும் நடவடிக்கைக்காக அந்நாட்டினுள் வருகை தந்தபோது, கைது செய்யப்பட்டால் அல்லது தடுத்துவைக்கப்பட்டால் அவர் சார்பாக சட்டரீதியாக, அந்நாட்டின் வெளிநாட்டு விவகார அமைச்சினூடாக தோற்ற வேண்டிய பொறுப்பு அவருக்கு உண்டென, சாத்தோவின் இராஜதந்திர செயன்முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது."

கலந்துரையாடுக.

(ii) தூதரக தலைவர் ஒருவருக்குள்ள ஏனைய பொறுப்புகள் பற்றி விளக்குக.

**4.** கீழ்வரும் விடயங்கள் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்சில் (United Nations Human Right Council)

(ii) சொந்த நாட்டு அலுவலர் (Home Based Staff)

(iii) உடனிகழ் தத்துவ நியமனம் (Concurrent Accreditation)

(iv) இராஜதந்திர கடவுச் சீட்டு (Diplomatic Passport)

**5.** (i) தூதுவராலயத்தில் இராஜதந்திர, நிர்வாகம்சார், தொழில்நுட்ப மற்றும் உதவிச்சேவை (Diplomatic, Administrative, Technical and Service) ஆகிய பிரிவுகளுக்குரித்தான அலுவலர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளும் நாட்டினுள் இராஜதந்திர விடுபாட்டுரிமையை (Diplomatic immunity) அனுபவிக்க முடியுமா? விளக்குக.

(ii) மேற்படி அலுவலர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்றுக்கொள்ளும் நாட்டில் தொழிலில் ஈடுபட இயலுமா? அப்படியாயின் எந்த ஏற்பாடுகளின் கீழ் என்பதைக் குறிப்பிடுக.

/பக். 2 ஐப் பார்க்க

6. (i) இராஜதந்திர அலுவலர் ஒருவர் ஏற்றுக் கொள்ளப்படும் நாட்டில் அப்பதவியைப் பொறுப்பேற்றல், சேவையை முடிவுறுத்தி சொந்த நாட்டுக்கு வருகைதரல் அல்லது வேறு சந்தர்ப்பமொன்றில் சேவை ஸ்தலத்துக்கு வருகைதரல்/வெளியேறுதல் போன்ற சந்தர்ப்பங்களில், மூன்றாவது நாடொன்றினூடாக (Third country) பயணம் செய்வதற்கு அவருக்கு/அவளுக்கு விசா வழங்கப்பட்டிருப்பின், அந்த மூன்றாவது நாடு அவருக்கு/அவளுக்கு எவ்வாறு கவனிப்பு அளிக்கவேண்டுமென்பதை வியன்னா சமவாயத்தின் கீழ் விளக்குக.

(ii) மேற்குறிப்பிட்ட அலுவலரின் குடும்ப உறுப்பினர்கள் இம்மூன்றாவது நாட்டினூடாகப் பயணம் செய்யும் போது (அலுவலரின் உத்தியோக காலப்பகுதியில்) அந்த மூன்றாவது நாடு எவ்வாறு அவர்களுக்கு கவனிப்பு செய்யும்?

(iii) நிர்வாகம் மற்றும் உதவிச்சேவை (Administrative and Service) எனும் தரங்களிலுள்ள அலுவலர்கள் தொடர்பாக அவர் மூன்றாவது நாடொன்றினூடாக பயணிக்கும் போது (அலுவலரின் உத்தியோக காலப்பகுதியில்) மூன்றாவது நாட்டின் கவனிப்பு எவ்வாறிருக்கும்?

7. (i) இருதரப்பு உறவு வீழ்ச்சியடைதல், தூதரகம் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக முடிவுறுத்தப்படல் ஆகிய சந்தர்ப்பங்களில், தூதரக அலுவலர் தன்னை நியமித்த தம் நாட்டுக்கு திரும்பி வரும் வரைக்கும் ஏற்றுக்கொள்ளும் நாட்டினதும் நியமிக்கும் நாட்டினதும் கடமைப் பொறுப்புகள் யாவை என்பதை வியன்னா சமவாயத்துக்கிணங்க விபரிக்குக.

(ii) போர் அல்லது திடீர் அனர்த்த நிலைமையின் போது தூதரகத்தின் கடமைகள் யாவை?

(iii) போர் அல்லது திடீர் அனர்த்த நிலைமையின் போது ஏற்றுக்கொள்ளும் நாடு மற்றும் நியமிக்கும் நாடு ஆகிய இருதரப்பினரதும் பொறுப்புகள் எவ்வாறு அமைந்திருக்கும்?

8. (i) இராஜதந்திர உறவுகள் உள்ள இரு நாடுகளின் (வெளிநாட்டு அமைச்சு அல்லாத) வேறு இரு அமைச்சுகள் (சமமான விடயதொழிற்பாடு உள்ள) தமக்கிடையே ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட எண்ணியுள்ளன. இதற்காகப் பின்பற்றப்படுகின்ற முழுமையான செயலொழுங்கினை படிமுறையாக விபரிக்குக.

(ii) இத்தகைய ஒப்பந்தமொன்று முடிவுறுத்தப்பட ஏதுவாயிருக்கக்கூடிய பல்வேறு விடயங்களைக் கலந்துரையாடுக.

(iii) இதற்கிணங்க ஒப்பந்தம் முடிவுறுகின்ற விதத்தை விளக்குக.

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை - 2017 (2018)**

1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service – 2017(2018)

**(25) சர்வதேச விவகாரங்கள்**
International Affairs

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

**ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக. எல்லா வினாக்களுக்கும் **சமமான** புள்ளிகள் வழங்கப்படும்.

1. பல்தரப்புத்தன்மையின் (Multilateralism) வீழ்ச்சியால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குள்ள பிரச்சினைகள் மற்றும் வாய்ப்புகள் பற்றி விவரிக்குக.

2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (Sustainable Development Goals) நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் பற்றிய தன்னார்வ தேசிய மீளாய்வு அறிக்கை ஒன்றினை இலங்கை 2018 ஜூலை மாதம் முன்வைத்தது.
பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் வழிமுறையில் ஒட்டுமொத்த அடைவினை மதிப்பீடு செய்து விசேடமாக இலங்கை பாரியளவு முன்னேற்றமடைந்துள்ள **மூன்று** துறைகளை விளக்குக.

3. ஐக்கிய அமெரிக்க குடியரசானது 2018 ஜூன் மாதம் அமெரிக்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலிலிருந்து (HRC) விலகிக் கொண்டது.
   (i) இத்தீர்மானமானது, இந்த கவுன்சிலின் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் தாக்கங்களை மதிப்பீடு செய்க.
   (ii) தற்போது மனித உரிமைகள் கவுன்சிலின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான விடயங்களில் இத் தீர்மானத்தால் ஏற்படும் விளைவுகள் எவை?

4. இந்தியாவைப் போன்றே சீனாவுடனும் சமநிலையான உறவுகளைப் பேணிவருவதே இலங்கையின் தற்போதைய வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய அடிப்படை அம்சம் ஆகும். இவ் இலக்கினை எய்தக்கூடிய நடவடிக்கைகள் **நான்கினை** பரிந்துரைக்குக.

5. பிரித்தானியாவானது ஐரோப்பிய கூட்டிலிருந்து வெளியேறியதன் (Brexit) விளைவுகள் பற்றியும், ஐரோப்பாவின் இலங்கை நலன்களில் இது எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் கலந்துரையாடுக.

6. 'பொருளாதார இராஜதந்திரம்' (Economic Diplomacy) என்பதை பிரதான கவனக்குவியமாக (Main Focus) இலங்கை இனங்கண்டுள்ளது. இலங்கையின் பொருளாதார நலன்களை வெளிநாடுகளில் மேம்படுத்தல் தொடர்பில் உமக்குள்ள அனுபவத்தின் அடிப்படையில், இது தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய கொள்கைசார் நடவடிக்கைகள் (Policy measures) **மூன்றினைப்** பரிந்துரைத்து அவை எவ்வாறு செயற்படுத்தப்படலாம் என்பதை கலந்துரையாடுக.

7. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வடகொரிய தலைவர் கிம் ஜொன்உன் ஆகியோருக்கிடையே நடைபெற்ற உயர்மட்ட கூட்டத்தின் முக்கியத்துவத்தினை உலக அமைதி தொடர்பில் மதிப்பீடு செய்க.

8. பின்வருவனவற்றுள் **நான்கினைப்** பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
   (i) Indian Ocean Rim Association – (IORA)
   (ii) GSP+
   (iii) இஸ்ராயேல் - பலஸ்தீன பிரச்சினையின் தற்போதைய நிலைமை
   (iv) ஐக்கிய அமெரிக்கா - ருசிய உறவுகள்
   (v) சார்க் அமைப்பினுள் ஒத்துழைப்புக்கு காணப்படும் தடைகள்

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service – 2017(2018)

**(25) International Affairs**

*Three hours*

- Answer only **five** questions. All questions carry **equal** marks.

1. Discuss the problems and prospects for developing countries in meeting the challenge of the decline in multilateralism.

2. In July 2018, Sri Lanka presented its Voluntary National Review on the progress in-implementing the Sustainable Development Goals (SDG).

   Explain Sri Lanka's overall performance on the path to meeting the SDG Goals and specifically highlight **three** areas in which the greatest progress has been made by Sri Lanka.

3. The United States of America in June 2018 withdrew from the Human Rights Council (HRC).
   (i) Evaluate the implications of this decision on the functioning of this body.
   (ii) What ramification could this have on issues concerning Sri Lanka presently on the HRC Agenda.

4. Maintaining a balanced relationship with India as well as China, is an important imperative in Sri Lanka's Foreign Policy at present. Recommend **four** measures through which this objective can be achieved.

5. Discuss the ramification of Brexit and how it could affect Sri Lanka's interests in Europe.

6. Economic Diplomacy has been identified as a main focus by Sri Lanka. On the basis of your experience in promoting Sri Lanka's economic interests abroad, recommend **three** policy measures that should be undertaken in this regard and as to how they could be operationalized.

7. Evaluate the significance of the Summit meeting between US President Donald Trump and North Korean leader Kim Jong-Un on world peace.

8. Write short notes on **four** of the following topics.
   (i) Indian Ocean Rim Association (IORA)
   (ii) GSP+
   (iii) Current status of the Israel-Palestine conflict
   (iv) US-Russia relations
   (v) Impediments to cooperation within SAARC

* * *